பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 07 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. ஜார்கண்ட் ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை மகாராஷ்டிர ஆளுநராகவும், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கைலாஷ்நாதனை புதுச்சேரி துணைநிலை ஆளுநராகவும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

3. உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளை விட நமது நாட்டில் எரிபொருள் விலை மிகவும் குறைவாக உள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

4. அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திருமதி கமலா ஹாரீஸ், தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

5. இலங்கை அணிக்கு எதிரான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 43 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை ஒலிபரப்பு செய்யும்.

அகில இந்திய வானொலி, டிடி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சானல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரையைத் தொடர்ந்து அதன் தமிழாக்கம் இடம்பெறும்.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

பழங்குடியின சமுதாயத்தினருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு 200 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

மேகாலயாவின் ஷில்லாங்கில் பட்ஜெட் குறித்த விவாதத்தில் அவர் பங்கேற்றார்.

பழங்குடியினர் சமூகத்தினருக்காக இந்த பட்ஜெட்டில் 13 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வடகிழக்கு பிராந்தியத்தின் வேளாண் மற்றும் தொழில்துறைகளை மேம்படுத்தும் வகையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் காரணமாக இப்பிராந்தியத்தில் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு பிராந்தியத்தில் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துவற்காக 19 ஆயிரத்து 338 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் சுற்றுலாத்துறை வளர்ச்சியடையும் என்றும் திரு. சர்பானந்த சோனோவால் குறிப்பிட்டார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த மற்றும் அண்டை நாடுகளை ஒப்பிடும்போது நாட்டில் எரிபொருள் விலை மிகவும் குறைவாக உள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

அஹமதாபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திறன் மேம்பாடு மூலம் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல், கட்டமைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு மத்திய பட்ஜெட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் உலகில் முதன்மையான 3 பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியாவை திகழச் செய்வதற்கு இந்த பட்ஜெட் முக்கியமான அம்சமாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

ஆந்திரப்பிரதேசம், பீகார் மாநிலங்களுக்கு மட்டும் இந்த பட்ஜெட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்படும் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை திரு. ஹர்தீப்சிங் பூரி மறுத்தார்.

<<<<>>>>

தமிழக மக்களின் வளர்ச்சியில் மாநில அரசு அக்கறை செலுத்தவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பங்கேற்காமல் புறக்கணித்தது தவறானது என்று கூறினார்.

மத்திய அரசின் சார்பில் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அவர் பட்டியலிட்டார்.

**<<<<>>>>**

நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

அதன்படி ஜார்கண்ட் ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மகாராஷ்டிர ஆளுநராகவும், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கைலாஷ்நாதன் புதுச்சேரி துணைநிலை ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெலங்கானா ஆளுநராக திரு. ஜிஷ்னு தேவ் வர்மாவும், ராஜஸ்தான் ஆளுநராக திரு. **Haribhau Kisanrao Bagde-**வும், சிக்கிம் ஆளுநராக திரு. ஓம்பிரகாஷ் மாத்தூரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜார்கண்ட் ஆளுநராக திரு. சந்தோஷ்குமார் கங்குவாரும், சத்தீஸ்கர் ஆளுநராக திரு. **Ramen Deka-**வும், மேகாலயா ஆளுநராக திரு. விஜய் சங்கரும், பஞ்சாப் ஆளுநராக திரு. குலாப்சந்த் கட்டாரியாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அசாம் மற்றும் மணிப்பூர் ஆளுநராக திரு. லஷ்மண் பிரசாத் ஆச்சார்யா நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, கட்சியின் தலைவர் திரு. ஜே.பி. நட்டா, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

பல்வேறு விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் திரு. நரேந்திர மோடி தமது கருத்துகளை எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய அரசின் கட்டமைப்பு திட்டங்களுக்கான தேவையால் நாட்டின் எஃகு உற்பத்தி 2030ஆம் ஆண்டுக்குள் 300 மில்லியன் டன்னை கடந்துவிடும் என்று எஃகு துறை செயலாளர் திரு. நாகேந்திர நாத் சின்ஹா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், எஃகின் தேவை 10 சதவீதம் அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

அரசு மற்றும் தனியார் துறைகளில் கட்டமைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவால் எஃகின் தேவை தொடர்ந்து அதிகரிக்கும் என்றும் திரு. நாகேந்திர நாத் சின்ஹா கூறினார்.

<<<<>>>>

தெலங்கானாவில் பெய்து வரும் கனமழையால் கோதாவரி ஆற்றின் நீர்மட்டம் 53 அடிக்கும் மேல் உயர்ந்துள்ளது.

இதையடுத்து பத்ராசலத்தில் வருவாய் துறையினர் 3வது அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை நிவாரண முகாம்களுக்கு அப்புறப்படுத்துமாறு ஆட்சியர் திரு. ஜிதேஸ் வி பட்டேல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அரசின் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்றும், அவசர தேவைகளுக்கு கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

கஷ்மீரில் நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

அனந்த்நாக் மாவட்டம் தக்சும் என்ற இடத்தில் அவர்கள் சென்று கொண்டிருந்த வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

கிஸ்துவாரில் இருந்து மர்வா என்ற இடத்திற்கு அவர்கள் பயணம் செய்துகொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்தது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக பாரம்பரிய இடங்கள் பட்டியலில் மேலும் 25 இடங்களை சேர்த்து யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய இடங்கள் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அசாமில் உள்ள 'மொய்தாம்' என்ற கல்லறை அமைப்பு முறை இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திருமதி கமலா ஹாரிஸ், தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

59 வயதான அவர், நவம்பர் 5ஆம் தேதி நடைபெற உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் தாம் வெற்றி பெறுவேன் என்று சமூக வலைதள பதிவில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதிபர் தேர்தலில் போட்டியிடும் திருமதி கமலா ஹாரீசுக்கு ஜனநாயக கட்சியினரின் பெரும் ஆதரவு உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

இலங்கை அணிக்கு எதிரான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 43 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பல்லேகலில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 213 ரன் எடுத்தது.

214 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இலங்கை, 19 புள்ளி 2 ஓவரில் 170 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

தம்புல்லாவில் நடைபெற உள்ள இப்போட்டி, பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஒலிம்பிக் போட்டியின் ஹாக்கி பிரிவில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வென்றது.

பாரீசில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நிமிடத்தில் ஹர்மன்ப்ரீத் சிங் பெனால்டி ஸ்ட்ரோக் மூலம் கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்தியா தனது அடுத்த ஆட்டத்தில் நாளை அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

மகளிர் குத்துச்சண்டை 54 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் ப்ரீத்தி பவார் - வியட்நாம் வீராங்கனை **Vo Thi Kim Anh**-ஐ வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் - சிராக் ஷெட்டி இணை, இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை, 21-17, 21-14 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின், **Lucas Corvee – Ronan Labar** இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் லக்ஷயா சென், 21-8, 22-20 என்ற செட் கணக்கில் கவுதமாலாவின் கெவின் கார்டனை வென்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

டேபிள் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய், 11-7, 11-9, 11-5, 11-5 என்ற செட் கணக்கில் ஜோர்டானின் **Yaman Zaid**-ஐ வென்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதற்கிடையே இன்றைய போட்டிகளில் துப்பாக்கி சுடுதல் மகளிர் 10 மீட்டர் ஏர்-பிஸ்டல் பிரிவின் இறுதிச் சுற்றில் இந்தியாவின் மனுபாக்கர் இன்று பங்கேற்கிறார்.

பேட்மிட்டன் மகளிர் பிரிவில் பி.வி. சிந்து மாலத்தீவின் **Fathimath Nabbah Abdul Razzaq-**ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் பிரிவில் ஹெச்.எஸ். பிரனாய் - ஜெர்மனியின் **Fabian Roth**-ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<The End>>>>**